# வைணவ சமய வளர்ச்சியில் பொய்கையாழ்வார் பாசுரங்கள்

‘இளஞ்சைவப்புலவர்’.திரு.ஜீ.பால்ராஜ்

விரிவுரையாளர்

இந்துநாகரிகத்துறை

கிழக்குப்பல்கலைக்கழகம்,இலங்கை.

**ஆய்வுச்சுருக்கம்**

சங்கமருவிய காலத்தில் வாழ்ந்தவரே பொய்கையாழ்வார்.இவர் பாடிய இலக்கியம் முதல் திருவந்தாதியாகும். இது நூறு பாசுரங்களைக் கொண்டுள்ளது. பண்டைக்காலம் தொட்டே தமிழகத்தில் சிவவழிபாடும் திருமால் வழிபாடும் நிலவியிருந்த போதிலும்அவ்வழிபாட்டு நெறிகள் சமய நெறியாக வளர்ச்சியடையத் தொடங்கியது சங்கமருவிய காலத்திலாகும். இதனால் அக்காலத்தில் சைவ, வைணவ மரபுகளைப் பரப்புவதற்காக காரைக்கால் அம்மையாரும் முதலாழ்வார்களும்இலக்கியங்களைப் படைத்தருளினர்.இவர்களது இத்தகைய செயற்பாடுகளினால் வைதிக சமயங்கள் படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்கின.முதலாழ்வார்களுள் பொய்கையாழ்வாரேவைணவ மரபுகளைப் பாடி வைணவ சமய வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்த முதலானவராகக் கருதப்படுகின்றார்.இவர் பாடிய வைணவ மரபுகளே பிற்கால வைணவப் பக்திக்கும் அடித்தளமிட்டது எனலாம்.ஆகையால்,வைணவ சமயத்தின் வளர்ச்சிக்காக பொய்கையாழ்வார் தனது பாசுரங்களில் முன்நிறுத்திய வைணவ மரபுகளைஆராய்வதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.இவ்வாய்வுக் கட்டுரையானது வரலாற்றாய்வு, விபரணப் பகுப்பாய்வு ஆகிய ஆய்வு முறைமைகளின் ஊடாக ஆய்வு செய்யப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:**பாசுரங்கள்,பொய்கையாழ்வார், வளர்ச்சி,வைணவசமயம், விஷ்ணு

**அறிமுகம்**

தமிழக வரலாற்றில் அவைதிக சமயங்கள் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த காலகட்டம் சங்கமருவிய காலமாகும். இக்காலகட்டத்தின் கடைக்கூற்றிலேதான் வைதிகசமயங்களான சைவம், வைணவம் செல்வாக்குப் பெற்று படிப்படியாக வளர்ச்சி பெறத்தொடங்கின. இக்காலத்து சைவ, வைணவவளர்ச்சியில் காரைக்கால் அம்மையாரும் முதலாழ்வார்களும் போற்றப்பட வேண்டியவர்களாவர். முதலாழ்வார்களுள் பொய்கையாழ்வாரே வைணவ மரபுகளைப் பாடி வைணவ சமய வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்த முதலானவராகக் கருதப்படுகின்றார்.இவர் காஞ்சி நகரத்தில் பொய்கையில் அவதரித்த காரணத்தினால் பொய்கையாழ்வார் என அழைக்கப்பட்டார். திருமால் அருளினால் அனைத்தையும் கற்று, சதாசர்வகாலமும் விஷ்ணுவின் நினைப்பிலேயே இருந்து தன்னையே மறந்து பகவானைப்பாடி மகிழ்ந்தார். வைணவத்தினர் இவரை கவிஞர் தலைவர் எனப்போற்றுகின்றனர். இவர் தனது பாசுரங்களில் விஷ்ணுவின் பரம்பொருள் தன்மை, வீரச்செயல்கள், அருட்கொடைத்திறன்,சரணாகதித் தத்துவம், அவதாரச் சிறப்பு போன்ற வைணவமரபுகளை பக்திச் சுவையுடன்பாடி மக்கள் மத்தியில் வைணப்பக்தியை ஏற்படுத்தினார். இவர் பாடிய வைணவ மரபுகளே பிற்கால வைணவப் பக்திக்கு அடித்தளமிட்டது எனலாம். ஆகையால், வைணவ சமயத்தின் வளர்ச்சிக்காக பொய்கையாழ்வார் தனது பாசுரங்களில் முன்நிறுத்திய வைணவ மரபுகளை ஆராய்வதனை நோக்காகக் கொண்டு இவ்வாய்வுக்கட்டுரையானது முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

**விஷ்ணுவின் பரம்பொருள் நிலை**

விஷ்ணு எனும் தெய்வத்தை முழுமுதற்கடவுளாக் கொண்டதே வைணவசமயமாகும். விஷ்ணு என்பதன் பொருள் ‘எங்கும் நிறைந்தவர்’ என்பதாகும். இந்நிலையைபொய்கையாழ்வார் “வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய் தேனாகிப் பாலாம் திருமலே”[01] எனப் பாடியுள்ளார். ஆழ்வார்கள் விஷ்ணுவைப் பரம்பொருளாகவும், முழுமுதற்கடவுளாகவும், பரப்பிரமமாகவும் நினைந்து வழிபட்டதனைஅவர்களுடைய பாசுரங்களிலும் வெளிப்படுத்தியுள்ளனர். அதற்கு அடித்தளமிட்டவராக பொய்கையாழ்வார் காணப்படுகின்றார். திருமாலின் மேலாம்

தன்மையை (பரத்துவம்)விளக்கி வைணவத்தின்பால் நம்பிக்கை கொள்ளச் செய்வதே அவரின் நோக்கமாகும். ஆயிரம் தெய்வங்களை மக்கள் வணங்கினாலும், அத்தெய்வங்களுக்குள் முதன்மையானோர் சிவன், திருமால், பிரமன் ஆகிய மூவருமே என்றும், மூவருள்ளும் முதன்மையானவர் கடல் நிறம் கொண்ட திருமாலே என்றும் உறுதிபடப் பாடுகின்றார். இதனை,

**"முதலாவார் மூவரே அம் மூவருள்ளும்**

**முதலாவான் மூரிநீர் வண்ணன்- முதலாய**

**நல்லான் அருளல்லால் நாம நீர் வையகத்து**

**பல்லார் அருளும் பழுது"**[02]எனப்பாடுகின்றார்.

மக்கள் சில தெய்வங்களைத் தங்களுடைய கடவுளாகக் கூறிக்கொண்டு, சுவரின் மேல் அத்தெய்வங்களை சித்திரமாக வரைந்தும் சிலையாக நிறுத்தியும் வழிபட்டு வந்தனர். இவ்வாறு இவர்கள் பல தெய்வங்களை வழிபட்டு வந்தாலும் அத்தெய்வங்களுள் திருமாலே மூல முதல்வன் எனப்பாடுகின்றார். இதனை,

**"அவர் அவர் தாம் தாம், அறிந்தவாறு ஏத்தி**

**இவர் இவர் எம்பெருமான் என்று சுவர்மிசைச்**

**சார்த்தியும், வைத்தும் தொழுவர் உலகு அளந்த**

**மூர்த்தி உருவே முதல்"**[03] எனப்பாடுகின்றார்.

பொய்கையாழ்வார் காலத்தில் பல தெய்வங்கள் வழிபடப்பட்டிருந்தாலும் அவர் விஷ்ணுவை பரம்பொருளாகப் போற்றுவதனை அவரது பாசுரங்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

பரம்பொருளான விஷ்ணுவே உலகத்தைப் படைத்து அதில் எட்டுத் திசைகளையும் அதற்குரிய தெய்வங்களையும் உருவாக்கிஅவற்றின்செயல்களையும் அவரே இயக்குகின்றார் என விஷ்ணுவின் முழுமுதற் தன்மையை உரக்கப் பாடுகின்றார். இதனை,

**"திசையும் திசை உறு தெய்வமும்தெய்வத்**

**திசையும் கருமங்கள் எல்லாம்அசைவில்**

**சீர்க் கண்ணன் நெடுமால் கடல் கடைந்த**

**கார் ஓத வண்ணன் படைத்த மயக்கு"**[04] எனப்பாடுகின்றார்.

பொய்கையாழ்வார் தனது பாசுரங்களில் விஷ்ணுவைப் பரம்பொருளாகப் போற்றிப் பாடி அதனூடாக மக்கள் மத்தியில் வைணவப்பக்தியை ஏற்படுத்தினார். இதனால் அக்காலத்தில் வைணவ சமயத்தில் வளர்ச்சி ஏற்பட்டது.

**விஷ்ணுவின் அவதாரச் சிறப்பு**

விஷ்ணு பகவான் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காக எடுத்த அவதாரங்களுள் 'தசாவதாரம்' எனப்படும் பத்து அவதாரங்களே சிறப்பாகப் போற்றப்படுகின்றன. அவை மச்சம், கூர்மம், வராகம், வாமனம், நரசிம்மம், பரசுராமர், இராமர், கிருஷ்ணர், பலராமர், கல்கி போன்றனவாகும்.'நல்லோரைக் காக்கவும், தீயோரை அழிக்கவும், அறத்தை நிலைநாட்டவும் நான் யுகந்தோறும் பிறக்கின்றேன்' என்று பகவத்கீதையில் பகவான் கூறுகின்றார். விஷ்ணுவின் இத்தகைய அவதாரங்களையும் அதன் சிறப்புக்களையும் பொய்கையாழ்வார் வியந்து பாடி அதனூடாக வைணவ சமய வளர்ச்சியை ஏற்படுத்த விழைகின்றார்.



© 2026, IRJTSR

கிருஷ்ணர் அவதாரமானது கம்சன் உள்ளிட்ட அதர்ம சக்திகளை அழித்து, தர்மத்தை நிலைநிறுத்தஎடுத்த அவதாரமாக விளங்குகிறது. கிருஷ்ணர் குழந்தையாக இருக்கும் போது யசோதையின் உருவில் தன்னைக் கொல்லவந்த பூதனை எனும் பேய் மகளிரைக் கொன்றார். இத்தகு வீரச் செயலினை பொய்கையாழ்வார் புகழ்ந்து பாடியுள்ளார். இதனை,

**“வாயவனை யல்லது வாழ்த்தாது கையுலகம்**

**தாயவனை யல்லது தாம்தொழா - பேய் முலை நஞ்சு**

**ஊணாக வுண்டான் உருவொடு பேரல்லால்**

**காணா கண் கேளாசெவி”**[05]எனப்பாடுகின்றார்.

விஷ்ணு பகவான் அசுர வேந்தன் மகாபலிச்சக்கரவர்த்தியின் அகந்தையினை அடக்கி தர்மத்தை நிலைநாட்டுவதற்காக குள்ளமான அந்தணச் சிறுவனாக (வாமனர்) அவதரித்தார். மகாபலியிடம் மூன்றடி மண் கேட்டு, பின் விஸ்வரூபம் எடுத்து (திருவிக்ரமர்) மூவுலகையும் அளந்து தர்மத்தை நிலைநாட்டினார். இதனை பொய்கையாழ்வார்,

**“பொரு கேட்டோர் ஏனமாய்ப் புக் கிடந்தாய்க்கு அன்றுன்**

**ஒரு கோட்டின் மேற்கிடந்த தன்றே – விரிதோட்ட**

**சேவடியை நீட்டித் திசை நடுங்க விண் துளங்க**

**மாவடிவின் நீயளந்த மண்”**[06]என்று பாடியுள்ளார்.

நரசிம்ம அவதாரம் என்பது மகாவிஷ்ணுவின் முக்கிய அவதாரங்களில் ஒன்றாகும், இதில் அவர் சிங்கத்தின் தலையும் மனித உடலும் கொண்ட வடிவத்தில் தோன்றி, தனது பரம பக்தனான பிரகலாதனைக் காப்பதற்காக கொடிய இரணியகசிபு என்ற அரக்கனை வதம் செய்தார், பக்தர்களை எந்த நேரத்திலும், எங்கும் வந்து காக்கும் கடவுளாக நரசிம்மர் விளங்குகிறார்.இதனை பொய்கையாழ்வார்,

**“வரத்தால் வலிநினைந்து மாதவ நின்பாதம்**

**சிரத்தால் வணங்கானாம் என்றே – உரத்தினால்**

**ஈரரியாய் நேர்வலியோன் ஆய இரணியனை**

**ஓரரியாய் நீஇடந்த தூன்”**[07]என்று பாடியுள்ளார்.

மகாவிஷ்ணு பூமியை அழிவிலிருந்து காப்பதற்காக எடுத்த அவதாரமே வராக அவதாரமாகும். திருமால் பன்றி (வராகம்) வடிவம் எடுத்து,பூமியைக் கடலுக்கடியில் கொண்டு சென்ற இரண்யாட்சன் என்ற அசுரனைக் கொன்று, பூமியை மீட்டுத் தன் கொம்புகளில் தாங்கி நிலைநிறுத்தினார். இது தீமைகளை அழித்து, பூமித்தாயை மீட்டெடுத்த அவதாரமாகப் போற்றப்படுகிறது.இந்த அவதாரம் பற்றி பொய்கையாழ்வார் ,

**“பிரான்! உன் பெருமை பிறரார் அறிவார்**

**உராய் உலகளந்த ஞான்று – வராகத்**

**தெயிற்றளவு போதாவா றென்கொலோ? எந்தை**

**அடிக்களவு போந்த படி”**[08]என்று பாடியுள்ளார்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2026, IRJTSR 

ஆணவத்தின் வடிவாக நின்ற இராவணனை அழிப்பதற்காகவிஷ்ணு பகவான் கோதண்ட இராமனாக பூமியில் அவதரித்தார். தனது மனைவி சீதாதேவியினை கவர்ந்து சென்ற இலங்கை வேந்தனான இராவணனை அழித்து அவனிடமிருந்து சீதாதேவியினை மீட்டெடுத்து உலகத்தில் தர்மத்தை நிலைநாட்டினார். இந்த அவதாரத்தை பொய்கையாழ்வார்,

**“அடைந்த அருவினை யோடு அல்லல் நோய் பாவம்**

**மிடைந்தவை மீண்டொழிய வேண்டில் - நுடங்கிடையை**

**முன்னிலங்கை வைத்தான் முரணழிய முன்னொரு நாள்**

**தன் விலங்கை வைத்தான் சரண்”**[09]எனப்பாடுகின்றார்.

இவ்வாறு பொய்கையாழ்வார் தனது பாசுரங்களில் விஷ்ணுவின் அவதாரச் சிறப்புக்களைப் பாடி அதனூடாக சமூகத்தில் வைணவ மரபுகளைப் பரப்புரை செய்துள்ளார்.

**திவ்ய தேசங்களின் சிறப்பு**

ஆழ்வார்களால்பாடப்பட்ட சிறப்புமிக்க வைணவத் திருத்தலங்கள் திவ்ய தேசம் எனவும், திவ்ய தேசங்களைப் பற்றிய பாடல்கள் மங்களாசாசனம் எனவும் அழைக்கப்படுகின்றன. அந்தவகையில் வைணவ சமயத்தின் காப்பரண்களாக விளங்கும் திருவரங்கம், திருக்கோவலூர், திருவெஃகா, திருவேங்கடம், திருப்பாற்கடல்,திருபரமபதம் போன்ற திவ்ய தேசங்களைப் பற்றியும் அவற்றின் சிறப்பினையும் மகிமையினையும் பாடி வைணவ சமயத்தின் வளர்ச்சியில் முன்நின்றவராக பொய்கையாழ்வார் விளங்குகின்றார்.

வேங்கடம், ஸ்ரீவைகுண்டம், திருவெஃகா, திருக்கோவலூர் போன்ற திவ்விய தேசங்களில் விஷ்ணு பகவான் வீற்றிருக்கும் தன்மை பற்றியும் அவற்றின் சிறப்புகள் பற்றியும் அத்தகைய திவ்விய தேசங்களைச் சென்று வழிபடுவதன் மூலம் பரமபதமடையலாம் எனவும் கூறுகின்றார் இதனை,

**“வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத**

**பூங்கிடங்கின் நீள் கோவல் பொன்னகரும் - நான் கிடத்தும்**

**நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே**

**என்றால் கெடுமாம் இடர்”**[10]என்று பாடியுள்ளார்.

விஷ்ணுவின் திருப்பாதங்கள் இப்பூவுலகில் முதன் முதல் பட்ட இடமாகத் திருவேங்கடத் திருத்தலம் விளங்குகின்றது. அத்தகு தெய்வத் தன்மை பொருந்திய திருவேங்கடத்தை ஆழ்வார் பெருமக்கள் பலர் மங்களாசாசனம் செய்து பாடியிருந்தாலும் அவர்களுள் பொய்கையாழ்வார் முதலானவராகவிளங்குகின்றார். அவர் தனதுபாசுரங்களில் பல இடங்களில் திருவேங்கடத்தைப் போற்றிப் பாடி மங்களாசாசனம் செய்துள்ளார்.

திருவேங்கடமலையின் சிறப்பையும், அங்கு அருளும் வேங்கடவனின் திவ்ய ரூபத்தையும் பாடுவதோடு, திருவேங்கட மலையயில் வாசங் கொள்ளும் வேங்கடவனை நினைந்துருகி வழிபடுகின்ற அடியார்களுக்கு குறையொன்றும் நேராதபடி பரமபதத்தை அடையச் செய்வார் என்றும் பாடுகின்றார். இதனை,

**“வழிநின்று நின்னைத் தொழுவார் வழுவா**

**பொழி நின்ற மூர்த்தியரே யாவர் - பழுதொன்றும்**

**வராத வண்ணமே விண் கொடுக்கும் மண்ணளந்த**

**சீரான் திருவேங்கடம்”**[11]எனப்பாடுகின்றார்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2026, IRJTSR 

இவ்வாறு திவ்ய தேசங்களின் சிறப்பினையும் அவற்றினை வழிபடுவதனால் கிடைக்கின்ற அருட் பேற்றினையும் பாடியதன் மூலம் மக்களை வைணவ சமயத்தின்பால் நம்பிக்கை கொள்ளச் செய்ததுடன் அதன்வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்துள்ளார்.

**விஷ்ணுவின் வீரச் செயல்கள்**

பொய்கையாழ்வார், விஷ்ணு பகவான் புரிந்த வீரச்செயல்களையும் லீலைகளையும் பாடி அக்காலச் சமூகத்தில் அவர் மீதான பக்தியை அதிகரிக்கச் செய்தார்.இதனால் வைணவப்பக்தி பெருகியது.இதனூடாக வைணவ வளரச்சியைக் கண்டார். அந்தவகையில் விஷ்ணு கிருஷ்ணாவதாரத்தில் கோவர்த்த மலையைக் குடையாகப் பிடித்தமை, குதிரை வடிவில் வந்த கேசி என்ற அசுரனது வாயைப் பிளந்தமை, கொலைத் தன்மை மிக்க குவலயாபீடம் என்கின்ற யானையுடன் போர்புரிந்து அதன் தந்தத்தை முறித்தமை, பூத்துக்குலுங்கும் குருந்த மரத்தைச் சாய்த்தமை இராமவதாரத்தில் தன் வில்லாலே ஏழு மாமரங்களைத் துளைத்தமை போன்ற வீரச்செயல்களைப் பாடியுள்ளார்.இதனை,

**"மலையால் குடைகவித்து மாவாய்ப் பிளந்து**

**சிலையால் மராமரம் ஏழ் செற்று – கொலை யானைப்**

**போர்க்கோ டொசித்தனவும் பூங்குருந்தம் சாய்த்தனவும்**

**கார்க்கோடு பற்றியான் கை"**[12] எனப் பாடுகின்றார்.

**விஷ்ணுவின் அருட்சிறப்பு**

பொய்கையாழ்வார் விஷ்ணுவின் அருட்கொடைத் திறன்களையும் விஷ்ணுவை வணங்கும் அடியவர்களை அவர் காத்தருளும் தன்மையினையும் விஷ்ணுவை அடைவதற்கான வழிபட்டு முறைகளையும் தனது பாசுரங்களில் பாடியுள்ளார். முதல்வனான திருமாலின் பேரருளே ஒப்புயர்வற்ற அழிவல்லாத பேரின்பத்தை தரவல்லது என்று உணர்த்துகின்றார். இதன் மூலமாக விஷ்ணு பக்தியினை மக்கள் மனதில் விதைத்துவைணவ சமயத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தினார்.

கரிய திருமேனியையுடைய திருமாலை கைகூப்பி வணங்கினால் எவரும் தீவினைகளால் துன்புறமாட்டார்கள், கொடிய நரகில் சேரமாட்டார்கள், சிறிதளவேனும் தீயவழிகளில் செல்ல மாட்டார்கள் என்கிறார் பொய்கையாழ்வார். இதனை,

**"வினையால் அடர்ப்படார் வெந்நரகில் சேரார்**

**தினை யேனும் தீக்கதிகட் செல்லார் - நினைதற்**

**கரியானைச் சேயானை ஆயிரம்பேர் செங்கட்**

**கரியானைக் கைதொழுதக் கால்"**[13] எனப்பாடுகின்றார்.

திருமாலை வணங்கும் அடியார்களுக்கு அவர்கள் மோட்சத்தை அடையத் தடையாக இருக்கும் இன்னல்களைப் போக்கி திருமால் அருள்பாலிப்பார். அவரை நித்தம் வழிபட கொடிய வினைகள் நீங்கும். இதனால் திருமாலின் திருவடியை அடையலாம் என்கிறார். இதனை,

**"காப் புன்னையுன்னக் கழியும் அருவினைகள்**

**ஆப் புன்னை யுன்ன அவிழ்ந்தொழியும் - மூப்புன்னைச்**

**சிந்திப்பார்க் கில்லை திருமலே நின்னடியை**

**வந்திப்பார் காண்பர் வழி"**[14]எனப்பாடுகின்றார்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2026, IRJTSR 

ஐம்புலன்களை அடக்கி,கொய்த மலர்களைக் கொண்டு அன்பு மிக்க வழியால் மிக எளிமையாக அவனைத் தொழுதால், உலகளந்த பெருமானைக் காண்பது எளிதாகும் என்கிறார். இதனை,

**“அரியபுலன் ஐந்தடக்கி ஆய்மலர் கொண்டு ஆர்வம்**

**புரிய பரிசினால் புல்கில் - பெரியனாய்**

**மாற்றாது வீற்றிருந்த மாவலியால் வண்கை நீர்**

**ஏற்றானைக் காண்பது எளிது”**[15] எனப்பாடுகின்றார்.

இவ்வாறு விஷ்ணுவின் அருட்சிறப்புக்களையும் அவரை வழிபடுகின்ற முறைகளையும் திருமாலை பக்தியுடன் வழிபட்டு அவரையே சரணடைந்தால் வீடுபேறு அடைய முடியும் என்பதனையும் தனது பாசுரங்களில் பொய்கையாழ்வார் சிறப்பித்துப் பாடுவதன் மூலமாக மக்கள் மத்தியில் வைணவப் பக்தியை ஏற்படுத்துகின்றார்.

**முடிவுரை**

பண்டைக்காலம் தொட்டே தமிழகத்தில் திருமால் வழிபாடு நிலவியிருந்த போதிலும் அது சமய நெறியாக வளர்ச்சியடையத் தொடங்கியது முதலாழ்வார்களின் காலத்திலேயாகும். முதலாழ்வார்களுள் முன்னுதித்த பொய்கையாழ்வாரே வைணவ சமய வளர்ச்சிக்கான ஆரம்ப முகிழ்ப்புக்களைஏற்படுத்தியவராக போற்றப்படுகின்றார். இவரே முதல் நாலாயிர திவ்ய பிரபந்தத்தை இவ்வுலகிற்கு அர்ப்பணித்தவர். இவரது பாசுரங்களில் இவர் வெளிப்படுத்திய வைணவசமய சித்தாந்தங்களே பிற்கால ஆழ்வார்களது வைணவ சமய வளரச்சிக்காண பணிகளுக்கும் உந்து சக்தியாக அமைந்தது எனலாம். இவர் விஷ்ணு பக்தியின் உச்சத்தினால் வைணவ சமய மரபுகளை தனது பாசுரங்களில் வெளிப்படுத்தி அக்காலச் சூழலில் வைணவ சமயத்தினை வளர்த்துச் சென்றுள்ளார். இதனால் பொய்கையாழ்வாரே வைணவ சமய வளர்ச்சியில் முன்நின்றவராக கருதப்படுகின்றார்.இவரது பாசுரங்கள் மூலமாக வைணவ சமய மரபுகள் சமூகத்தைச் சென்றடைந்தன. இதனால் அவரது காலத்தில் வைணவ சமயத்தில் வளர்ச்சி ஏற்பட்டு அது பிற்காலத்தில் வைணவப் பக்தி இயக்கமாக உருவெடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**அடிக்குறிப்புக்கள்**

[1] முதல் திருவந்தாதி– பா.92, ப.52.

[2] முதல் திருவந்தாதி– பா.15, ப.20.

[3] முதல் திருவந்தாதி– பா.14, ப.20.

[4] முதல் திருவந்தாதி– பா.07, ப.17.

[5] முதல் திருவந்தாதி– பா.11, ப.19.

[6] முதல் திருவந்தாதி– பா.09, ப.18.

[7] முதல் திருவந்தாதி– பா.90, ப.52.

[8] முதல் திருவந்தாதி– பா.84, ப.49.

[9] முதல் திருவந்தாதி– பா.59, ப.38.

[10] முதல் திருவந்தாதி– பா.77, ப.46.

[11] முதல் திருவந்தாதி– பா.76, ப.46.

[12] முதல் திருவந்தாதி– பா.27, ப.25.

[13] முதல் திருவந்தாதி– பா.65, ப.41.

[14] முதல் திருவந்தாதி– பா.75, ப.45.

[15] முதல் திருவந்தாதி– பா.50, ப.35.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2026, IRJTSR 